தால் கொடுத்துவிட வேண்டும் என்பதில்லை. எல்லாரும் கையைத் தூக்கினுல் எல்லோருக்கும் அனுமதி கொடுக்க முடியுமா ? கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்றிருக்கிறது. அது வேண்டாம், எவ்வளவு மணி நேரம் வேண்டுமானுலும் கேள்வி நேரத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்ருல் விதியை மாற்றுங்கள். தூக்கிய கை ஒய்கிற வரையில் கேள்விகளை அனுமதிக்க வேண்டுமென்று விதியை மாற்றுங்கள். எவ்வளவு உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்க விரும்புகிருர்களோ அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்த பிறகுதான் அடுத்த கேள்விக்குப் போக வேண்டுமென்ருல் அதற்கான முறையில் விதியை மாற்றுங்கள். அப்போது எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் போகலாம். அப்படிச செய்யுங்கள். அதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. கே. விநுயகம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நம் விதியில் குறைந்தது ஒரு மணி நேரம் கேள்விக்காக செலவிடவேண்டுமென்றுதான் இருக்கிறது. அது மினிமம். மாக்ஸிமம் லிமிட் இவ்வளவு என்று இல்லை. அது உங்கள் டிஸ்க்ரீஷன். ரூல்ஸை படித்துச் சொல்லுங்கள்.

The first hour shall be allotted for question time. **The time** can be extended at your discretion. You don't want to use your discretion. **What can I do?**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப் போட்டிருக்கிறதா ?

**பரிசு திட்டத்தில் இழப்பு.**

* **627 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

1969 எப்ரல், மே, ஜூன் மாதங்களில் பரிசுச் சீட்டில் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1969 எப்ரல், மே, ஜூன் திங்களில் தமிழ் நாடு அரசுக்கு இழப்பு எதும் இல்லை. ஆனுல் 8,04,850 பரிசுச் சீட்டுகள் விற்பனையாகாததால் ஆதாயத்தில் மட்டுமே ரூ. 8,04,850 குறைந்தது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** எப்ரல், மே மாதங்களில் எவ்வளவு வரிசைச் சீட்டுகள் வெளியிடப்பட்டன ? அப்படி வெளியிடப்பட்ட சீட்டுகளில் சில சீட்டுகள் விற்பனையாகவில்லை என்று சொன்னுர்கள். அதனுல் எந்த நஷ்டமும் ஏற்படவில்லையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூன்று மாதங்களுக்குள்ளது இருக்கிறது, அதைச் சொல்லிவிடுகிறேன்.

எப்ரல் மாதத்தில் பரிசுச் சீட்டுகள் மொத்தம் 90 லட்சம் டிக்கட்டுகள் அச்சிடப்பட்டன. அதில் விற்பனையானது 89,14,650. விற்பனையாகாமல் அழிக்கப்பட்டது 85,350. மே மாதத்தில் 60 லட்சம் அச்சிடப்பட்டன. அதில் விற்பனையாகியது 54,40,450. விற்பனையாகாதது 5,59,550. ஜூன் மாதத்தில் 40 லட்சம் அச்சிடப்பட்டன. அதில் விற்பனையானது 38,40,050 விற்பனையாகாதது 1,59,950. மொத்தம் 1,90,00,000. அதில் விற்பனையானது 1,81,95,150. விற்பனையாகாமல் தங்கியது. பேப்பராக இருக்கிற டிக்கட்டுகள் 8,04,850. இதில் நஷ்டம் இல்லை. வந்திருக்கிற லாபத்தில் கொஞ்சம் குறைந்துவிட்டது.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், அநேக இடங்களில் ஒரு ரூபாய்க்கு முழு பரிசுக் சீட்டு வாங்கச் செல்லும் பொழுது ஒரு ரூபாய்க்குக் கொடுக்காமல், 10 அணுவிற்குக் கொடுக்கிறேம், 20 டிக்கட்டுகளில் பங்கு கொடுக்கிறேம் என்று சொல்லி விற்பனை செய்வதாக அரசுக்குத் தாக்கீது வந்துள்ளதா ? ஆமெனில் அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன? குறிப்பாக திருநெல்வேலியிலிருந்து அப்படி தகவல் வந்திருக்கிறதா ?

[1970 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தாக்கீது அரசுக்கு அப்படி வராது. அரசாங்கம்தான் அனுப்புமே தவிர, அப்படி அவர்களிடம் ஏதாவது தகவல்கள், புகார்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால், அப்படி முறைகேடுகள் இருந்தால் அந்த முறைகேடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. எஸ். அக்னிராஜு** : தலைவரவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அதன் வருமானம், இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் உள்ள வருமானங்களில் நம்முடைய மாகாணத்தின் வருமானம் எந்த வரிசைக் கிரமத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்** : இதிலே நாம் ஒன்றும் போட்டி போட முயற்சிக்கவில்லை. சில நல்ல காரியங்களுக்காக செய்ய நாம் முயற்சியெடுக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி** : சார், மாதா மாதம் இலட்சம் ரூபாய் பரிசளிக்கும் பரிசுத் திட்டத்தை நடத்தி வருகிறது. ஆனால் பொங்கல் பரிசு என்று 5 இலட்சம் ரூபாய் சிறப்புப் பரிசு என்று வழங்கியது. இப்பொழுது புத்தாண்டுப் பரிசு என்று 10 இலட்சம் என்றிருக்கிறது. இப்படி பரிசுத் தொகை ஏறிக்கொண்டே வருகிறதே, அது எந்த அளவில் போய் நிற்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அவர்கள் அதிகமாக வேண்டுமென்று கருதுகிறார்களா அல்லது சமதர்மத்திலே திடீரென்று நம்முடைய சுதந்திரா கட்சி உறுப்பினரவர்களுக்கு ரொம்ப அக்கறை வந்துவிட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. மக்கள் நலத்துறை நிறுவனமாக ஆக்கி சில காரியங்கள் செய்யப்படும் முயற்சியாக இருக்கிறது. அந்த முயற்சியில் யாரோ சில பேர்களைப் பணக்காரர்களாகச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட முயற்சியல்ல. எல்லோரும் பங்கு கொள்கிறோம். நம்முடைய அபிவிருத்தி வேலைகளிலே, குடிநீர் வசதி, பள்ளிக்கூடங்கள் அமைக்க இப்படிப்பட்ட சமூக நலப் பணிகளுக்காக சகல மக்களின் பங்கும், பணியும் அதிலேயிருக்கிறது.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப்** : தலைவரவர்களே, விற்பனையாகாத பரிசுச் சீட்டிற்குப் பரிசு விழுந்தால் அது யாருக்குச் சேரும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : விற்பனையாகாத டிக்கெட்டுகளைப் பொறுத்தவரையிலே, முதல் பரிசிலே விற்பனையாகாத டிக்கெட்டுகளுக்கு வந்தால், அது விற்பனையான டிக்கெட்டிற்கு வரும் வரையில் குலுக்கப்படும், இரண்டாவது பரிசுக்கும் அப்படித்தான். மூன்றாவது பரிசுக்கும் விற்பனையாகிற டிக்கெட்டிற்குக் கொடுக்கப்படும். 4-வது பரிசுச் சீட்டைப் பொறுத்த வரையிலே (combination) ஆக 4 டிஜிட்கள்தான் ஒதுக்கப்படுகிறது. 100 ரூபாய் பரிசு விற்பனையான பரிசுச் சீட்டிற்கும் விற்பனையாகாத பரிசுச் சீட்டிற்கும் கொடுக்கப்படுகிறது. விற்பனையாகாத டிக்கெட்டிற்குப் பரிசுக் கிடைத்தாலும் அது அரசாங்கத்தினுடைய கஜானாவிலே, அரசாங்கம் வெற்றி பெற்றதாகச் சேர்க்கப்படுகிறது. அது ரொம்ப சொற்பத் தொகைதான்.

*Fire accident in Royapettah*

* 608 *Q.*—THIRU K. VINAYAKAM : **Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether five children between four and eight years of age, died in a fire which broke out in a shed on the terrace of a home in Royapettah, Madras on 17th January 1970; and

(*b*) the causes for the fire?